# மேல்நிலை முதலாம் ஆண்டு
# இரண்டு மதிப்பெண் வினாவிடை

## 1. வாழ்த்து

### குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)

**1. குறிப்பு வரைக.**

**அ) தாயுமானவர்**

| | | |
|---|---|---|
| பிறந்த ஊர் | : | திருமறைக்காடு |
| காலம் | : | கி.பி 18ஆம் நூற்றாண்டு |
| பெற்றோர் | : | கேடிலியப்ப பிள்ளை – கெஜவல்லி அம்மையார் |
| பெயர்க்காரணம் | : | திருச்சிராப்பள்ளி தாயுமானவப் பெருமான் அருளால் பிறந்தமையால் இப்பெயர் பெற்றார். |
| மனைவி பெயர் | : | மட்டுவார் குழலி (இவரை மணந்தும் இல்லற வாழ்வில் பற்றின்றி இருந்தார்) |

**2. குறிப்பு வரைக. ஆ) நீ.கந்தசாமிப் புலவர்**

| | | |
|---|---|---|
| பிறந்த ஊர் | : | பள்ளியகரம் |
| பிறப்பு | : | 09-06-1898 |
| பெற்றோர் | : | நீலமேகம் பிள்ளை - சௌந்திரவல்லி அம்மையார் |
| படிப்பு | : | பள்ளி இறுதி வகுப்பு வரை |
| இறப்பு | : | 18-06-1977 |

**3. குறிப்பு வரைக. இ) சுப்பிரமணிய பாரதியார்**

| | | |
|---|---|---|
| பிறந்த ஊர் | : | திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் |
| பிறப்பு | : | 11-12-1882 |
| பெற்றோர் | : | சின்னசாமி ஐயர்-இலக்குமி அம்மையார் |
| இறப்பு | : | 11-09-1921 |

**4. இறைவன் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளன யாவை?**

- ❖ இறைவன் அருளுருவாய் பழுத்துள்ள பழத்தின் சுவையானவன்.
- ❖ கரும்பாகவும், தேனாகவும், அமிர்தமாகவும் அடியவர்க்கு இனிப்பவன்.
- ❖ கண்ணைப்போல இன்றியமையாதவன்.
- ❖ உலகில் கிடைத்தற்கு அரிய பொருளனைத்தும் தரும் சிறந்த பொருளானவன்.

**5. நீ. கந்தசாமிப் புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையை எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளார்?**

- ❖ உலகில் தோன்றிய பழங்கால மக்கள் தம் உள்ளக் கருத்தை மற்றவர்க்குக் கைச்சைகைகளால் தெரிவித்து வந்தனர்.
- ❖ அக்காலம் நீங்கிட, தமிழ்மக்கள் மெல்ல நாவையசைத்துப் பேசுமாறு செய்த தமிழ்த்தாயின் திருவடிகளில் தலைவைத்து ஏத்திப்பணிவோம் என நீ. கந்தசாமிப்புலவர் அவர்கள் தமிழ்த்தாயின் பெருமையைப் போற்றிப்புகழ்ந்துள்ளார்.

**6. பாரதித்தாயின் பெருமைகளை பாரதியார் எவ்வாறு புகழ்ந்துரைத்துள்ளார்?**

- ❖ எங்கள் தாயாய் விளங்கும் பாரதத்தாயே!
- ❖ நீ எல்லாச் செல்வங்களையும் நிரம்பப் பெற்றுள்ளாய்.
- ❖ உனக்கு நிகர் எவரும் இலர்.
- ❖ நீ எத்தகைய தீங்குமற்று விளங்குகிறாய்.
- ❖ பலவகை அணிகளை பூண்டு அழகாய் விளங்குகின்றாய் என்று கூறுகிறார்.

### கூடுதல் வினாக்கள்:

**1. பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?**

- ❖ கண்ணன் பாட்டு
- ❖ குயில் பாட்டு
- ❖ பாஞ்சாலி சபதம்

**2. பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?**

- ❖ இந்தியா
- ❖ விஜயா

**3. இறைவன் எவ்வெவ் பொருள்களாய் விளங்குவதாய்த் தாயுமானவர் குறிப்பிடுகிறார்?**

இறைவன்,

- ❖ அருள் பழுத்த பழச்சுவையாயும்,
- ❖ கரும்பாயும், தேனாயும்,
- ❖ அமிர்தமாயும், கண்ணாயும்,
- ❖ அரிய பொருளனைத்தும் தரும் பரம்பொருளாயும்,
- ❖ பூரணமாயும், புனித வாழ்வாயும், விழுப்பொருளாயும் விளங்குவதாய் தாயுமானவர் குறிப்பிடுகிறார்.

## 2. தொகைநூல்கள்

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

1. **புறநானூறு பற்றிக் குறிப்பு வரைக.**
   - ❖ இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
   - ❖ 400 பாடல்களைக் கொண்டது.
   - ❖ புறம், புறப்பாட்டு என வழங்கப்படும்.
   - ❖ பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு புலவர்களால் இயற்றப்பட்டது.

**2. வரையா மரபின் மாரிபோல – உவமையை விளக்கிப் பொருளோடு பொருத்துக.**

**உவமை** : அளவின்றி பெய்வது மழை

**உவமேயம்** : பேகன் கொடை கொடுத்தலில் அளவில்லாதவன்

**உருபு** : போல

**விளக்கம்** : மழை எவ்விடத்திலும் வரையறை இல்லாமல் எங்கும் பெய்யவல்லது. அதுபோல பேகனும் வரையறை இல்லாமலும், ஆராயாமலும் கொடுக்கின்ற இயல்புடையவன் என்பதாகும்.

**3. கழற்கால் பேகனைப் பரணர் எங்ஙனம் புகழ்ந்துரைத்துள்ளார்?**

- ❖ மழை எங்கு எவ்விடத்தில் எப்படி பெய்ய வேண்டும் என வரையறை இல்லாமல் பெய்யும்.
- ❖ அதுபோல கழற்கால் பேகனும் கொடைக் கொடுத்தலில் அறியாமை உள்ளவனாய் இருப்பான்.
- ❖ ஆனால் பிறர் படைகொண்டு போரிட வந்தால் போர் நெறிக்கு மாறாய்ச் செயல்படாமல் போர் புரிவான் எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

**4. அகநானூறு குறிப்பு வரைக.**

- ❖ அகப்பொருள் பற்றி கூறுவது.
- ❖ அடிவரையறை 13 முதல் 31 வரை
- ❖ களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை என முப்பிரிவுகளைக் கொண்டது.
- ❖ தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர்

**5. ஔவையார் பற்றி குறிப்பு வரைக.**

- ❖ சங்ககால பெண்பாற் புலவர்களுள் சிறந்து விளங்கியவர்.
- ❖ அதியமான் நெடுமானஞ்சி என்ற குறுநில மன்னனுடன் ஆழ்ந்த நட்பு கொண்டவர்.
- ❖ ஔவையார் பாடிய பாடல்கள் புறநானூறு, நற்றிணை, குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

**6. நிரம்பா நீளிடை எத்தகையது?**

- ❖ இது நீண்ட காட்டு வழிப்பகுதி
- ❖ எப்படிச் செல்வது என மயங்கும் வண்ணம் பலகிளை வழிகளைக் கொண்டது.
- ❖ அங்கு ஒரே ஈற்றில் 3 குட்டிகளை ஈன்று வலிமையற்று சோர்ந்து பசியோடு இருந்தது பெண்புலி.
- ❖ அதன் பசியைப்போக்க வேட்டையாடும் பொருட்டு ஆண்புலி மானின் நடமாட்டத்தை ஆராய்ந்தபடி உலவும். இத்தகையது நிரம்பா நீளிடை.

**7. அகநானூற்றில் அமைந்த குறிப்புப் பொருளைத் தெளிவுபடுத்துக.**

- ❖ பிணவின் பசிக்கு இரங்கி உழைமானின் குரலை ஓர்க்கும் உழுவையேற்றை அலையும் நீளிடையே சென்றுவராததால் நம் தலைவர் நம் நோய்க்கு இரங்கி விரைய வருவார் என்னும் கருத்துபடத் தலைவி குறிப்பால் உணர்த்தினாள்.

**8. ஐங்குநுறூறு பற்றிக் குறிப்பு வரைக.**
- ❖ 3 அடி சிறுமையும் 6 அடி பெருமையும் னொண்டது.
- ❖ மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் வரிசைமுறையில் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ ஒவ்வொருதிணைக்கும் நூறு பாடல்களாக 500 பாடல்களை கொண்டது.
- ❖ ஐந்து நூறுகளையும் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்.

**9. கபிலர் பற்றி குறிப்பு வரைக.**
- ❖ புலனழுக்கற்ற அந்தணாளன் எனப் புகழப்பட்டவர்.
- ❖ வள்ளல் பாரியின் அவைக்களப்புலவர்
- ❖ இவரின் பாட்டு வன்மைக்கு "கபிலரது பாட்டு" என்னும் தொடரே சான்றாகும்.
- ❖ குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து போன்ற நூல்களில் இவரது பாடல்களை காணலாம்.

**10. தலைமகற்கு தோழி கூறியன யாவை?**
- ❖ கண்டோர் தீப்பிழம்புகளோ என அஞ்சும் மலர்களைக் கொண்ட வேங்கை மரத்தின் மீது வீற்றிருந்த மயில், அழகிய அணிகலன் அணிந்த இளம்பெண் போல் தோன்றுவதற்கு இடனான மலைநாடனே!
- ❖ எம் தலைவியின் மங்கல மனையில் திருமணம் நிகழ்த்த ஏதுவாய், முன்பு களவு காலத்தில் யாருக்கும் தெரியாமல் இவள் கூந்தலில் மலர் சூட்டிய நீ, இன்று பலரும் மகிழும்படி மலர் சூட்டினாய். இத்தகைய பெருமை வாய்ந்த செயல்செய்த உன்னைப் பெற்றெடுத்த, உன் பெற்றோர் என்ன தவம் செய்தாரோ! அவர் நீண்ட காலம் வாழ்க!

**11. ஐங்குறுநூற்றுப்பாடலால் அறியவரும் உள்ளுறை பொருளைத் தெளிவுபடுத்துக.**
- ❖ "தலைவனே நின் உறவினர் இன்று தலைவிக்குத் திருமணம் கருதிப் பூச்சூட்டிச் சிறப்பு செய்தனர். நீயோ அவளோடு பழகியிருந்த நாள்களிலேயே அவளுக்கு மணமகட்கோலம் போல அழகு செய்து மகிழ்ந்திருந்தனை என்று உள்ளுறை உவமம் தோன்ற நின்றது.

**கூடுதல் வினாக்கள்:**

**1. மேற்கணக்கு நூல்கள் யாவை?**
- ❖ பத்துப்பாட்டு
- ❖ எட்டுத்தொகை

**2. எட்டுத்தொகை நூல்களை குறிப்பிடுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. நற்றிணை | 2. குறுந்தொகை | 3. ஐங்குறுநூறு | 4. பதிற்றுப்பத்து |
| 5. பரிபாடல் | 6. கலித்தொகை | 7. அகநானூறு | 8. புறநானூறு |

**3. எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியன யாவை?**
- ❖ பதிற்றுப்பத்து
- ❖ புறநானூறு

**4. புறத்திணைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. வஞ்சி | 2. கரந்தை | 3. வஞ்சி | 4. காஞ்சி | 5. நொச்சி | 6. உழிஞை |
| 7. தும்பை | 6. வாகை | 7. பாடாண் | 8. பொதுவியல் | 9. கைக்கிளை | 10. பெருந்திணை |

**5. பேகன்-குறிப்பு வரைக.**
- ❖ கடையெழு வள்ளல்களுள் ஒருவர்
- ❖ கான மஞ்ஞைக்கு கலிங்கம் நல்கிய புகழுக்குரியவன்
- ❖ பேகனது ஊர் நல்லூர், என்றும், அவன் ஆவியர் குடியில் பிறந்தவன் என்பதும் தெரியவருகின்றது.

**6. கொடைமடம், படைமடம்-வேறுபடுத்துக.**
- ❖ இல்லாதவர்க்கும் உள்ளவர்க்கும் இரந்தவர்க்கும் இரவாதவர்க்கும் பாகுபாடின்றி வரையாது கொடுத்தல் கொடைமடம்
- ❖ வீரர் அல்லாதார் மேலும், முதுகிட்டார் மேலும், புண்பட்டார் மேலும், மூத்தார் இளையார் மேலும் செல்லுதல் படைமடம்.

**7. அகநானூற்றின் பிரிவுகள் யாவை?**

1. களிற்றியானை நிரை - 120 பாடல்கள்
2. மணிமிடைபவளம் - 180 பாடல்கள்
3. நித்திலக்கோவை - 100 பாடல்கள்

**8. அகநானூற்றை திணை அடிப்படையில் வகைப்படுத்துக.**

- குறிஞ்சி திணை - 2,3 என வரும் பாடல்கள்
- முல்லைத்திணை - 4,14 என வரும் பாடல்கள்
- மருதத்திணை - 6,16 என வரும் பாடல்கள்
- நெய்தல் திணை - 10,20 என வரும் பாடல்கள்
- பாலைத்திணை - 1,3,5 என வரும் பாடல்கள்

**9. அகநானூற்றை தொகுத்தோர் மற்றும் தொகுப்பித்தோரை எழுதுக.**

- தொகுத்தவர் - மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர்
- தொகுப்பித்தோர் - பாண்டியன் உக்கிரப்பெருவழுதி

**10. வெள்ளி வீதியார்-குறிப்பு வரைக.**

- சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்
- ஆதிமந்தியைப் போல் இவளும் தன் கணவனை தேடி அலைந்தாள் என சங்க நூல்கள் கூறுகின்றன.
- இவர் குறுந்தொகையில் 8 பாடல்களும், நற்றிணை மற்றும் குறுந்தொகையில் 2 பாடல்களும், திருவள்ளுவமாலையில் ஒரு பாடலும் பாடியுள்ளார்.

**11. ஐங்குறுநூற்றை பாடிய புலவர்களின் பெயர்களை குறிப்பிடுக.**

- குறிஞ்சி - கபிலர்
- முல்லை - பேயனார்
- மருதம் - ஓரம்போகியார்
- நெய்தல் - அம்மூவனார்
- பாலை - ஓதலாந்தையார்

**12. ஐங்குறுநூற்றை தொகுத்தோர் மற்றும் தொகுப்பித்தோரை எழுதுக.**

- தொகுத்தவர் - புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
- தொகுப்பித்தவர் - யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

## 3. அற இலக்கியம் - திருக்குறள்

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. திருக்குறளின் பகுப்புகள் யாவை?**

- அறத்துப்பால்
- பொருட்பால்
- காமத்துப்பால்

**2. திருக்குறளுக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?**

- முப்பால்
- உத்தரவேதம்
- தெய்வநூல்
- வாயுறை வாழ்த்து
- தமிழ்மறை
- பொதுமறை

**3. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறுபெயர்கள் யாவை?**

- முதற்பாவலர்
- தெய்வப்புலவர்
- மாதானுபங்கி
- செந்நாப்போதார்

- ❖ பொய்யில் புலவர்
- ❖ பெருநாவலர்
- ❖ நாயனார்
- ❖ தேவர்

**4. அமரருள் உய்ப்பது எது?**
அடக்கம் என்னும் சிறந்த குணம்.

**5. ஆரிருள் உய்ப்பது எது?**
அடங்காமை என்னும் தீய குணம்.

**6. மலையினும் மாணப்பெரிது எது?**
தனக்குரிய நிலையிலிருந்து மாறுபடாமல் அடக்கத்தோடு வாழ்பவனுடைய உயர்வு.

**7. ஒருமையுள் ஆமை போல் - விளக்கு.**
- ❖ ஆமை தனக்குத் துன்பம் வரும்போது ஐந்து உறுப்புகளையும் தன் ஓட்டினுள் அடக்கிக் காத்துக்கொள்ளும்.
- ❖ அதுபோல ஒரு பிறப்பில் ஒருவன் தன் ஐம்பொறிகளையும் அடக்கி வாழ்வனாயின், அது ஏழு பிறவிக்கும் காவலாய் அமையும்.

**8. பேரறிவாளன் திரு எத்தகையது?**
பேரறிவாளனிடம் உள்ள செல்வம், ஊர் நடுவே உள்ள நீர்நிறைந்த குளம் போல யாவர்க்கும் பயன்படும்.

**9. நயனுடையான் கண்படும் செல்வத்துக்கு கூறப்படும் உவமையைச் சுட்டுக.**
நல்லபண்பு உள்ளவனிடம் சேரும் செல்வமானது ஊருக்குள்ளே பழமரம் பழுத்திருப்பது போல அனைவருக்கும் பயன்படும்.

**10. பெருந்தகையான் கண்படும் செல்வம் எதற்கு ஒப்பானதாகும்?**
பெருந்தகையானிடம் உள்ள செல்வம் பிணி தீர்க்கும் மருந்தாகிப் பயன்தர தவறாத மரம்போல எப்போதும் பயன் தருவதாகும்.

**11. விற்றுக் கோள் தக்கது உடைத்து - எது?**
பிறருக்கு உதவுவதால் ஒருவருக்குப் பொருட்கேடு முதலிய ஏற்படுமானால், அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது கொள்ளத்தக்கதாகும்.

**12. ஒருவன் ஆராய வேண்டிய நால்வகை வலிமைகள் யாவை?**
- ❖ தான் செய்யக்கருதிய செயலின் வலிமை
- ❖ அதை செய்ய விரும்பும் தன் வலிமை
- ❖ அதற்கு ஊறு செய்து விலக்கக்கூடிய பகைவனது வலிமை
- ❖ தனக்குத் துணையாவார், பகைவர்க்குத் துணையாவார் வலிமை.

**13. இடைக்கண் முரிந்தார் பலர் -யார்?**
தம்மிடமுள்ள வலிமையை அறியாதவராய் மனவெழுச்சியினாலே தூண்டப்பட்டுச் செயலைத் தொடங்கிவிட்டு, இடையிலே தோற்றுப்போனவர்கள் பலர் உள்ளனர்.

**14. பொருளைப்போற்றி வழங்கும் நெறியாக வள்ளுவர் உரைப்பன யாவை?**
- ❖ தன்னிடமுள்ள பொருளின் அளவைத் தெரிந்து, அதற்குத் தகுந்த அளவே கொடுத்தது உதவ வேண்டும்.
- ❖ அதுவே பொருளைப்பற்றி வழங்குதற்குரிய நெறியாக வள்ளுவர் கூறுகிறார்.

**15. பீலிப்பெய் சாகாடு உயர்த்தும் உண்மை யாது?**
- ❖ மெல்லிய மயிலிறகையே, தாங்கும் அளவுக்கு மேல் ஏற்றினால் வலிய வண்டியின் அச்சு முறியும்.
- ❖ அதுபோல எளியராயினும் பலர் ஒன்று கூடினால் அவர் மிக்க வலியவராவார்.

**16. கூகையைக் காக்கை பகல் வெல்லும்-விளக்குக.**
- ❖ கூகை, காக்கையைக் காட்டிலும் வலிமை வாய்ந்தது.
- ❖ ஆயினும் அதற்குப் பகலில் கண் தெரியாது.
- ❖ அக்காலம் அறிந்து காகம் அதனை வெல்லும்.

**17. ஊக்கமுடையவன் ஒடுக்கத்திற்குக் காட்டப்படும் உவமையைச் சுட்டுக.**
ஊக்கம் உடையவன் காலத்தை எதிர்பார்த்து அடங்கியிருப்பதானது, ஆட்டுக்கடா பகையைத் தாக்குவதற்கு பின்வாங்கும் தன்மையை போன்றது.

**18. கொக்கு காலமறிதலுக்கு ஏற்ற உவமையாதல் யாங்ஙனம்?**
- ❖ வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப்போல் அமைதியாக இருக்கவேண்டும்.
- ❖ உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப்போல விரைந்து செயலை முடிக்க வேண்டும்.

**கூடுதல் வினாக்கள்**

**1. திருக்குறள்- குறிப்பு வரைக.**
- ❖ திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.
- ❖ இந்நூல் 133 அதிகாரங்களையும் 1330 பாடல்களையும் கொண்டது.
- ❖ இந்நூல் முப்பெரும் பிரிவுகளை கொண்டது.
- ❖ திருக்குறள் தமிழ்மாதின் இனிய உயிர்நிலை எனப்போற்றப்படுகிறது.

**2. திருக்குறளில் உள்ள இயல்கள் எத்தனை?**
- ❖ அறத்துப்பால் - பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
- ❖ பொருட்பால் - அரசியல், அங்கவியல், ஒழிபியல்
- ❖ காமத்துப்பால் - களவியல், கற்பியல்

**3. அடக்கத்தை பொருளாகக் காக்க வேண்டும்-ஏன்?**
- ❖ மக்கள் உயிர்க்கு அடக்கத்தை விட மேம்பட்ட செல்வம் வேறு இல்லை
- ❖ ஆகையால் அந்த அடக்கத்தை உறுதிப்பொருளாகக் கொண்டு அழியாமல் காக்க வேண்டும்.

**4. அறக்கடவுள் யாருடைய இருப்பிடத்தை தேடிச் செல்வார்?**
சினத்தைக்காத்து, கல்வி கற்று, அடங்கி வாழ்தலையும் மேற்கொள்பவனின் ஒழுங்கைக் கண்டு அறக்கடவுளே அவன் இருப்பிடம் தேடிச்செல்வார்.

## 4. தொடர்நிலைச்செய்யுள்
## அ) சீவக சிந்தாமணி

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. சிந்தாமணி-பெயர்க்காரணம் தருக.**
- ❖ சிந்தாமணி என்பதற்கு ஒளிகுன்றாத மணி என்பது பொருள்.
- ❖ இந்நூல் குன்றுதல் இல்லாமல் அழகுத்தமிழ் நடையினைப் பெற்றுள்ளது.
- ❖ தமிழ் மாந்தரால் தம் நெஞ்சில் வைத்துப் போற்றப்படுவது.
- ❖ இதனால் இந்நூல் இப்பெயர் பெற்றது.

**2. சிந்தாமணிக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் யாவை?**
- ❖ சீவக சிந்தாமணி
- ❖ மணநூல்
- ❖ முக்தி நூல்

**3. சிந்தாமணியில் எத்தனை இலம்பகங்கள் உள்ளன?**
- ❖ 13 இலம்பகங்கள் உள்ளன.
- ❖ நாமகள் இலம்பகம் முதல் முக்தி இலம்பகம் வரை.

**4. திருத்தக்கதேவர் புனைந்த வேறொரு நூல் யாது?**
- ❖ நரிவிருத்தம்

5. **தத்தையின் யாழிசையால் நிகழ்ந்தன யாவை?**
   - ❖ தத்தை யாழை வாசித்தவாறு அதற்கேற்ப பாடினாள்.
   - ❖ அது கேட்டு இலைகளை உடைய சோலைகள் உருகி வளைந்தன.
   - ❖ பட்ட மரங்கள் துளிர்த்தன.
   - ❖ கின்னரம், மிதுனம் போன்ற பறவைகள் தம்மை மறந்து நிலத்தில் வீழ்ந்தன.

6. **தத்தை இசைமரபுக்கேற்ப இசை வழங்கியமை யாங்ஙனம்?**
   - ❖ தத்தை பாடும் போது இடைப்பிங்கலையின் இயக்கம் ஆக்கி, நடவுத் தொழில் வரப்பாடினாள்.
   - ❖ இவ்வாறு இசை மரபுக்கேற்ப பாடியமையால் புருவங்கள் நெற்றியில் ஏறவில்லை.
   - ❖ கண்கள் அசையவில்லை. தொண்டை விம்மவில்லை. பற்கள் வெளியே தெரியவில்லை.

7. **கொடிப் புல்லும் கொடி-விளக்குக.**
   - ❖ சீவகனை கண்டதும் தத்தை அவன் மீது காதல் கொண்டாள்.
   - ❖ அதனால் வேல் பாய்ந்த மான்போல் வருந்தினாள்; திகைத்தாள்; பெருமூச்சு விட்டாள்; நடுங்கினாள்.
   - ❖ பின், தோழி வீணாபதியை ஒரு கொடியைத் தழுவும் மற்றொரு கொடிபோலத் தழுவினாள்.

8. **பருந்தும் நிழலும் போல உவமையை விளக்குக.**

   உவமை : பருந்து உயர பறக்கும் போது பூமியில் அதன் நிழல் பின்னும் அதே முறையில் செல்லும்.
   உவமேயம் : சீவகன் பாடலும் யாழிசையும் இணைந்திருந்தது.
   உவம உருபு : போல
   பொருத்தம் : பருந்து பாட்டுக்கு உவமையாயிற்று. அதாவது பருந்து போல சீவகன் பாட்டும் நிழல்போல அப்பாட்டுக்கு அவன் வாசித்த யாழ் வாசிப்பும் இருந்தன என்பதாகும்.

**கூடுதல் வினாக்கள்:**

1. **ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?**
   - ❖ சிலப்பதிகாரம்
   - ❖ மணிமேகலை
   - ❖ சீவகசிந்தாமணி
   - ❖ வளையாபதி
   - ❖ குண்டலகேசி

2. **காந்தருவதத்தையார் இலம்பகம் - குறிப்பு வரைக.**
   - ❖ சீவகசிந்தாமணியில் காந்தருவதத்தையார் பற்றிய நிகழ்வுகளை கூறுவதால் காந்தருவதத்தையார் இலம்பகம் ஆயிற்று.
   - ❖ வெள்ளிமலையிலுள்ள வித்தியாதரர் வேந்தன் கலுழவேகனின் மகள் காந்தருவத்தை ஆவாள்.
   - ❖ காந்தருவத்தையின் திருமண நிகழ்வுகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.
   - ❖ மேலும் யாழ் மற்றும் அதன் சிறப்பினை பற்றியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

3. **கைத்தொழில் பொருந்தப்பாடுதல் என்றால் என்ன?**
   - ❖ எண்வகை முறைமையறிந்து பாடுதல் கைத்தொழில் பொருந்தப்பாடுதல் எனப்படும்.
   - ❖ அவையாவன, பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு ஆகியன எண்வகை முறைமைகள் ஆகும்.

4. **நரம்பிற் பிறந்த பொல்லாமைகள் யாவை?**
   - ❖ செம்பகை - இன்பமில் ஓசை
   - ❖ ஆர்ப்பு - அளவிறந்திசைப்பது
   - ❖ கூடம் - மழுங்கியிசைப்பது
   - ❖ அதிர்வு - சிதறியுரைக்குநர் உச்சரிப்பிசை

5. **மரக்குற்றங்கள் யாவை? (அ) பண்கள் மயங்குவதற்கு காரணம் என்ன?**
   - ❖ நீரிலே நிற்றல்
   - ❖ அழுகுதல்
   - ❖ நெருப்பிலே வேகுதல்
   - ❖ பாரிலே நிற்றல்
   - ❖ இடி விழுதல்

## ஆ) சீறாப்புராணம்

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. சீறாப்புராணம் என்ற தொடரின் பொருள் யாது?**
- சீறா+புராணம்=சீறாப்புராணம்
- சீறத் என்னும் அரபுமொழிச்சொல் சீறா எனத் திரிந்தது.
- சீறா-வாழ்க்கை புராணம்-வரலாறு
- நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை கூறும் நூல்

**2. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?**
- விலாதத்துக்காண்டம்
- நுபுவ்வத்துக்காண்டம்
- ஹிஜ்ரத்துக் காண்டம்

**3. சீறாப்புராணம் தொடங்கவும் முற்றுபெறவும் துணைநின்ற வள்ளல் பெருமக்கள் யாவர்?**

உமறுப்புலவர்,
- சீறாப்புராணத்தை தொடங்க உதவியவர் : வள்ளல் சீதக்காதி
- சீறாப்புராணத்தை முடிக்க உதவியவர் : அபுல்காசிம் மரைக்காயர்

**4. உமறுப்புலவர் - ஆசிரியர் குறிப்பு வரைக.**
- சீறாப்புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவர் ஆவார்.
- அவர் கடிகை முத்துப்புலவரின் மாணவர் ஆவார்.
- இவர் முதுமொழிமாலை என்ற 80 பாக்களால் ஆன நூலையும் படைத்தளித்துள்ளார்.
- உமறுப்புலவரின் காலம் 17-ம் நூற்றாண்டு

**கூடுதல் வினாக்கள்**

**1. சின்னச்சீறா குறிப்பு வரைக.**
- சீறாப்புராணத்தில் நபிகள் நாயகத்தின் வாழ்வு முற்றிலுமாகப் பாடி நிறைவு செய்யப்படவில்லை.
- பனூ அகமது மரைக்காயர் என்பவர்தாம் பெருமானாரின் திருவாழ்வு முழுமையும் பாடி முடித்தார்.
- அந்த நூல் சின்ன சீறா என வழங்கப்படுகிறது.

**2. நபிகள் பெருமான் பாம்பினிடம் வினவியது என்ன?**
- "பாம்பே! ஒரு துன்பமுற்று இம்மலைக்குகைக்கு வந்து தங்கியிருக்கும் நாங்களோ எம் முன்னோர்களோ ஏதேனும் தீங்கு இழைத்துள்ளோமா?
- நாங்கள் எக்குற்றத்தையும் செய்யவில்லை.
- அவ்வாறு இருக்க நஞ்சு தலைக்கேற நீ தீண்டியது எக்காரணத்தால்?" என்று பெருமான் வினாவினார்.

## இ) மனோன்மணீயம்

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. வானோர்க்கு என்றும் உவப்பாய் இருப்பது யாது?**
- "அந்தணர் வளர்க்கும் செந்தழல் தன்னிலும்........வானோர்க் கென்றுமே உவப்பு"
- அந்தணர் யாக குண்டத்தில் வளர்க்கும் வேள்வித்தீயைக் காட்டிலும் நாட்டுப்பற்று உள்ளத்தில் மூட்டிவிட்ட கோபத்தீயே வானோர்க்கு என்றும் உவப்பாய் இருக்கும்.

**2. முரசறையும் போது கூறவேண்டியன யாவை?**
- பகைவர்களே! பாண்டி நாட்டு மக்கள் தங்கள் உரிமையைப் பெரியதாய் மதிக்கும் பண்புடையவர்கள். அவர் வீரத்தை தூண்டி விடாதீர்கள்.
- சுதந்திரமே பாண்டிய நாட்டாருக்கு உயிர் ஆகும். சுதந்திரம் பற்றிய உணர்வே பாண்டிய நாட்டாரது உயிர்மூச்சும் ஆகும்.

**3. புகழின் காயம் - எது?**
- போரில் அடையும் காயம் காயமன்று
- அது வெற்றித் தெய்வம் முத்தமிட்டு அளித்த முத்திரை
- அது பல தலைமுறைக்குப் புகழின் சின்னமாய் விளங்கும்.
- ஆதலால் அது புகழின் காயமாகும்.

**4. இரந்து கோட்டக்கது யாது?**
- ❖ உலகில் இனி வரவிருக்கும் பல தலைமுறை மக்கள் ஒவ்வொரு நாளும் தாம் அனுபவித்துக் கொண்டு வரும் உரிமை
- ❖ தம் முன்னோர் போரில் ஏற்ற புண்களால் தாம் அடைந்தது என்பதை எண்ணுவர்.
- ❖ இத்தகைய மேன்மை வாய்ந்த புண், பிறரிடம் இரந்தாவது பெற்றுக்கொள்ளத்தக்கது ஆகும்.

**கூடுதல் வினாக்கள்**

**1. பிறந்தார் எனப்படாதார் யார்?**
- ❖ உலகில் ஒவ்வொரு கணத்திலும் எத்தனையோ பேர் பிறக்கின்றனர். எத்தனையோ பேர் இறக்கின்றனர்.
- ❖ அவரெல்லாம் உலகில் பிறந்தவர்களாய் அறிஞர்களால் கருதப்பட மாட்டார்.
- ❖ அழியாது உலகில் நிலைத்து நிற்கும் புகழ் உடம்பை பெறாதவர் பிறந்தார் எனப்படாதவர் ஆவார்.

**2. பெ.சுந்தரம்பிள்ளை இயற்றிய நூல்கள் யாவை?**
- ❖ நூல்தொகை விளக்கம்
- ❖ திருஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி
- ❖ திருவிதாங்கூர் பண்டை மன்னர் கால ஆராய்ச்சி

## ஈ) குயில்பாட்டு

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. பாரதியாரின் முப்பெரும் நூல்களாக சுட்டப்பெறுபவை யாவை?**
- ❖ கண்ணன் பாட்டு
- ❖ குயில் பாட்டு
- ❖ பாஞ்சாலி சபதம்

**2. பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?**
- ❖ இந்தியா
- ❖ விஜயா

**3. பாரதியார் வசன கவிதைகள் யார் யாருடைய கவிதைகளோடு ஒப்பிடப்படுகின்றன?**

அமெரிக்க கவிஞர்களான,
- ❖ வால்ட் விட்மன்
- ❖ கலீல் கிப்ரான்

**கூடுதல் வினாக்கள்**

**1. பாரதியார் சிறுகுறிப்பு வரைக.**
- ❖ தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னசாமி, இலக்குமி இணையோருக்கு மகனாகப் பிறந்தார்.
- ❖ இளமையில் கவிபாடும் திறமை பெற்றிருந்ததால் பாரதி எனப் புகழப்பட்டார்.
- ❖ அடிமைபட்டு கிடந்த இந்தியாவில் வீறுகொண்டெழுந்த விடுதலை வேட்கைக்குத் தம் கவிதைகளால் உரம் ஊட்டியவர்.

**2. பாரதியார் எழுதிய உரைநடைநூல்கள் யாவை?**
- ❖ ஞானரதம்
- ❖ சந்திரிகையின் கதை
- ❖ தராசு

## 5. சிற்றிலக்கியங்கள்

## அ) அழகர் கிள்ளைவிடுதூது

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. தூதாக அனுப்பத்தக்க பொருட்கள் யாவை?**
- ❖ அன்னம்
- ❖ மயில்
- ❖ கிளி
- ❖ குயில்
- ❖ வண்டு
- ❖ நெஞ்சம்

- முகில்
- தென்றல்
- மான்
- தமிழ்

2. **பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை எழுதிய நூல்கள் யாவை?**
   - மதுரை மும்மணிக்கோவை
   - தேவையுலா
   - தென்றல்விடு தூது

**கூடுதல் வினாக்கள்**

1. **தூது குறிப்பு வரைக.**
   - தூது தமிழில் வழங்கும் 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
   - தலைவன் ஒருவன்பால் காதல் கொண்ட தலைவி ஒருத்தி தன் காதலைத் தலைவனுக்கு உரைத்து, அவன் மாலையைப் பெற்று வருமாறு தூது அனுப்புவதாகப் பாடப்படுவது தூது என்னும் இலக்கியமாகும்.

2. **அரிவடிவு மாய்ப்பின் னரன் மாகிப் - இவ்வரிகளில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?**
   - இவ்வரிகளில் திருமாலின் நரசிம்மவதாரம் சிறப்பித்து கூறபட்டுள்ளது.
   - மனித உடலும் சிங்க முகமாகப் பெரிய தூணில் இருந்து வெளிப்பட்டு,
   - இரணியனையும் அவனது படைகளையும் அழித்தவர் திருமால் என்பது இப்பாடலின் கருத்து ஆகும்.

## ஆ) கலிங்கத்துப்பரணி

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

1. **பாட்டியல் நூல்கூறும் பரணிக்குரிய இலக்கணம் யாது?**
   போர்முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிக்கொண்ட வீரரைப் பாடுவது பரணி.

2. **பரணி குறித்து உ.வே.சா கூறுவது யாவை?**
   - பரணி நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது.
   - இந்த நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கு பெயராக வந்தது என உ.வே.சா கூறுகிறார்.

3. **செயங்கொண்டார் குறித்து குறிப்பு வரைக.**
   - செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் ஆவார்.
   - இவர் குலோத்துங்க சோழனின் அவைக்களப்புலவராக திகழ்ந்தவர்.
   - இவர் காலம் 12-ம் நூற்றாண்டு.

**கூடுதல் வினாக்கள்**

1. **பரணி-குறிப்பு வரைக.**
   - 96 சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும்.
   - போர்முனையில் 1000 யானைகளை கொன்று வெற்றிகொண்ட வீரரைப் பாடுவதைப் பரணி என்றனர்.
   - தோற்றவர் பெயரில் பரணி நூல் வழங்கப்பெறும்.

2. **தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி எது?**
   - தமிழில் முதன் முதலில் எழுந்த பரணி கலிங்கத்துப் பரணி
   - இது 509 தாழிசைகளைக் கொண்டது.
   - ஒட்டக்கூத்தர் கலிங்கத்துபரணியைத் ‘தென்தமிழ் தெய்வப்பரணி’ என்று சிறப்பித்துள்ளார்.

3. **பாணர் என்று கூறிப் பிழைத்தாரின் செயல் யாது?**
   - சோழப்படைக்கு அஞ்சிய கலிங்க வீரர்கள் பலர் யானைகளின் கழுத்தில் கிடந்த மணிகளை எடுத்துக் கையில் ஏந்திக்கொண்டனர்.
   - நாங்கள் தெலுங்கு பாணர்கள் என்று சொல்லி மணிகளைத் தாளத்துடன் ஒலித்தனர்.
   - மேலும், சேனைகள் மடிந்து கிடக்கும் இப்போர்க்களத்தினைக் கண்டு திகைப்புற்று நிற்கிறோம்.
   - நாங்கள் உங்கள் அடிகளில் வாழும் பாணர்கள் என்று கூறி சோழர்களின் காலில் விழுந்து வணங்கி உயிர் தப்பினர்.

**4. அமணர் என்று கூறிப்பிழைத்தாரின் செயல்யாது?**

- ❖ சோழப்படைக்கு அஞ்சிய கலிங்க வீரர்கள் பலர் தப்பிப் பிழைக்க புதர்களில் புகுந்து ஓடினர்.
- ❖ அப்போது அவர்களது தலைமயிரும், உடுத்தி இருந்த ஆடையும் முட்புதரில் சிக்கிப் பறிக்கப்பட்டன.
- ❖ இவ்வாறு பறிக்கப்பட்ட முடியும் போக,
- ❖ மீதமுள்ள முடிகளையும் தாங்களே பறித்துக்கொண்டு நாங்கள் ‘அமணர்’ என்று பொய்க்கூறி தப்பிப் பிழைத்தனர்.

## இ) முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறுக.**

- ❖ இது 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.
- ❖ கடவுளரையோ, அரசரையோ, பிறரையோ குழந்தையாய்ப் பாவித்து குழந்தைப்பருவ நிகழ்ச்சிகள் எல்லாம் அமையப் பாடப்பெறுவது.
- ❖ இது 10 பருவங்களைக் கொண்டது.
- ❖ பிள்ளைத்தமிழ் இருவகைப்படும். ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ்

**2. குமரகுருபரர் பற்றி சிறுகுறிப்பு வரைக.**

- ❖ தாமிரபரணி நதிக்கரையிலுள்ள திருவைகுண்டத்தில் சண்முகசிகாமணி கவிராயருக்கும், சிவகாமிசுந்தரிக்கும் மகனாகப் பிறந்தார்.
- ❖ பிறந்தது முதல் ஐந்தாண்டுகள் வரையில் பேச்சின்றி இருந்தார்.
- ❖ திருச்செந்தூர் முருகப்பெருமான் திருவருளாள் பேசுந்திறம் பெற்றார்.

**கூடுதல் வினாக்கள்**

**1. ஆண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் யாவை?**

- ❖ ஆண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் 10 வகைப்படும்
- ❖ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் ஆகும்.
- ❖ சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகியன ஆண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் ஆகும்.

**2. பெண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் யாவை?**

- ❖ பெண்பால் பிள்ளைத்தமிழ் பருவங்கள் 10 வகைப்படும்
- ❖ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி இருபாலருக்கும் பொதுவான பருவங்கள் ஆகும்.
- ❖ அம்மானை, நீராடல், ஊசல் பெண்பால் பிள்ளைத்தமிழுக்குரிய பருவங்கள் ஆகும்.

**3. குமரகுருபரர் எழுதிய நூல்கள் யாவை?**

- ❖ கந்தர் கலிவெண்பா
- ❖ மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
- ❖ மதுரைக்கலம்பகம்
- ❖ நீதிநெறி விளக்கம்
- ❖ காசிக்கலம்பகம்

**4. செங்கீரையாடுதல்-குறிப்பு வரைக.**

- ❖ செங்கீரைப்பரும் பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவமாகும்.
- ❖ பொருள் தெரியாத ஒலியை குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிப்பது.
- ❖ தொட்டில் பிள்ளை தலையையுயர்த்திக் கையால் ஊன்றி உடம்பை அசைத்தலைச் செங்கீரையாடுதல் என்பர்.

## ஈ) பெத்தலேகம் குறவஞ்சி

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. தஞ்சை வேதநாயக சாத்திரியார் எழுதிய பிறநூல்கள் யாவை?**

- ❖ ஞானத்தச்சன்
- ❖ ஞானவுலா
- ❖ ஆராணாதிந்தம்
- ❖ பல்வேறு கீர்த்தனங்கள்

**2. எவ்வகை அணி அமைப்பில் பெத்தலேகம் குறவஞ்சி நூல் அமைந்துள்ளது?**
முற்றுருவக அணி

**3. சிற்றிலக்கியங்கள் எத்தனை வகைப்படும்? எவையேனும் ஐந்து எழுதுக.**
- ❖ சிற்றிலக்கியங்கள் 96 வகைப்படும்
- ❖ கோவை, உலா, அந்தாதி, பள்ளு, தூது, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி

**கூடுதல் வினாக்கள்**

**1. குறவஞ்சி நூலின் பொது அமைப்பினை எழுதுக.**
- ❖ தெருவில் உலா வரும் தெய்வத்தையோ, மன்னனையோ கண்டு தலைவி காதல் கொண்டு மனம் நலிதல்.
- ❖ வீதியிலே குறத்தி வருதல், தலைவி அவளை அழைத்து குறிக் கேட்டல்.
- ❖ குறத்தி தன் குலப்பெருமை, மலைவளம் பற்றி புகழ்ந்து கூறி தலைவியின் கருத்தை கண்டுணர்ந்து உரைத்தல், அதனால் தலைவி மனம் மகிழ்ந்து வரிசையளித்தல்.

**2. பெத்தலேகம் குறவஞ்சி குறிப்பு வரைக.**
- ❖ பெத்தலேகம் குறவஞ்சியை இயற்றியவர் தஞ்சை வேதநாயகம் சாத்திரியார் ஆவார்.
- ❖ உலாவரும் மன்னர் இயேசுவாகவும், தேவமோகினியாகிய தலைவி சீயோன் மகளாகவும்
- ❖ குறவஞ்சி விசுவாசமாகவும்,
- ❖ குறிகூறுதல் தீர்க்கதரிசனமாகவும், நூவன் உபதேசியாகவும்,
- ❖ அவர்கள் பிடிக்கும் பறவைகளாக மக்களும், அதற்கு பயன்படும் வலையாக இறை வாக்கு என்ற நற்செய்தியும் உருவகிக்கப்பட்டுள்ளன.

**3. தஞ்சை வேதநாயக சாத்திரியார் - சிறுகுறிப்பு வரைக.**
- ❖ திருநெல்வேலியில் தேவசகாயம், ஞானப்பூ அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்.
- ❖ மதபோதகராக விளங்கிய சுவார்ட்ஸ் பாதிரியாரின் மாணாக்கருள் ஒருவராவார்.
- ❖ தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னருக்கு உற்ற நண்பராக விளங்கினார்.
- ❖ இவரின் காலம் கி.பி 18-ம் நூற்றாண்டு

## மறுமலர்ச்சிப் பாடல்கள்
## அ) எந்நாளோ?

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. தமிழ்நாட்டார் எத்தகைய கீர்த்தியைப் பெறவேண்டும் எனக் கவிஞர் கனவு காண்கிறார்?**
- ❖ தமிழ்நாட்டார் அனைவரும் கல்வி கற்று வாழவேண்டும்
- ❖ சொல்லதற்கு அரிய பெருமையுடைய கலை அறிவாலும் வீரத்தாலும் அன்பாலும் சிறந்ததான இமயமலையைப்போல் உயர்ந்த புகழைப் பெற்று இன்புற்று வாழவேண்டும்
- ❖ இத்தகையான கீர்த்தியை தமிழ்நாட்டு மக்கள் பெறவேண்டும் என கவிஞர் கனவு காண்கிறார்.

**2. புத்தகச் சாலையில் இருக்கவேண்டிய புதுநூல்களாகப் பாவேந்தர் உரைப்பன யாவை?**
- ❖ சித்திர நூல்கள்
- ❖ கணித நூல்கள்
- ❖ ஆராய்ச்சி நூல்கள்
- ❖ சமய நூல்கள்
- ❖ சிற்ப நூல்கள்
- ❖ அறிவியல் நூல்கள்

**3. கவிஞரின் செவியில் பாய வேண்டிய செய்தி யாது?**
தம் தாய்மொழியாகிய அழகிய தமிழை தமிழ்சான்றோர்களின் கவிதைகளை ஆயிரக்கணக்கான மொழிகளை பேசும் மக்கள் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துப் படித்து சுவைக்க இவ்வுலகத்தார் விரும்புகின்றனர் என்ற செய்தியே கவிஞர் செவியில் பாய வேண்டிய செய்தி என்கிறார்.

**4. வையம் கலங்குமாறு தமிழர் செய்யத்தக்கது யாது?**
- ❖ தமிழர் கூட்டம் வெள்ளம் போன்றது. வீரம் நிறைந்தது.
- ❖ தமிழர்கள் உடலால் பலராய்க் காணப்பட்டாலும் உள்ளத்தால் ஒருவரே.

- ❖ கள்ளத்தால் அழித்துவிடலாம் என்ற எண்ணத்தோடு யாரும் தமிழர்களை நெருங்கமுடியாது.
- ❖ இவ்வுலகத்தார் அனைவரும் கலக்கத்தோடு காணும் ஒற்றுமை தமிழர்களின் ஒற்றுமை.

**5. ஆடவரும் மகளிரும் சமானத்தர் ஆகவேண்டும் என்ற கருத்தினைக் கவிஞர் எங்ஙனம் கூறியுள்ளார்?**
- ❖ கண்களும் அவற்றின் ஒளியை போலவும் அழகிய மலர்களும் அவற்றின் மணமும் போலவும்
- ❖ அப்பெரிய தமிழ்நாட்டில் பெண்களும் ஆண்களும் குளிர்ந்த கடல் போன்ற அன்பால் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் சமமானவர்களாய் வாழ்கிறார்கள் என்ற செய்தியை கேட்க வேண்டும் என ஆசிரியர் விரும்புகிறார்.

**கூடுதல் வினாக்கள்**

**1. அழியா சோதிமிக்க நவ கவிதை குறிப்பு வரைக.**
- ❖ பழமையின் பெருமையை அடித்தளமாகவும் புதிய களங்களை பாடுபொருளாகவும் கொண்டு எழுந்தவை மறுமலர்ச்சி இலக்கியங்களாகும்.
- ❖ இவற்றை பொருள் அழியா சோதிமிக்க நவ கவிதை எனலாம்.
- ❖ இவை மானிடத்தின் விழுப்பொருள்களையும் அவலங்களையும் புதிய நோக்குடன் பார்க்கும்.

**2. பாரதிதாசன் சிறுகுறிப்பு வரைக.**
- ❖ புதுச்சேரியில் கனகசபை, இலக்குமியம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தவர்.
- ❖ இவர் இளமையிலேயே பிரெஞ்சு மொழியிலும் தமிழ்மொழியிலும் புலமை பெற்றவர்.
- ❖ அவர் தமிழ்நாட்டின் இரசூல் கம்சதேவ் என்று போற்றப்படுகிறார்.
- ❖ தமிழக அரசு பாரதிதாசன் பல்கலைக்கழகம் நிறுவி இவர் புகழைப் போற்றியுள்ளது.

**3. பாரதிதாசன் இயற்றிய காப்பியங்கள் யாவை?**
- ❖ குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு, இருண்ட வீடு, தமிழச்சியின் கத்தி, சேரத்தாண்டவம், பிசிராந்தையார், அழகின் சிரிப்பு, குறிஞ்சித்திட்டு ஆகியன ஆகும்.
- ❖ இவர் இயற்றிய பிசிராந்தையார் நாடகம் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது.

## ஆ) பூக்கட்டும் புதுமை

**குறுவினாக்கள் (புத்தக வினாக்கள்)**

**1. புதுமை எவ்வாறு இருக்கவேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்?**
- ❖ மனதைக் கவரும் மனத்தைக்கொண்ட மலர்களைப் போல,
- ❖ நன்மையை அளித்து மக்களைக் காக்கின்றதாய் இருத்தல் வேண்டும் எனக் கவிஞர் விரும்புகிறார்.

**2. புதுமை எப்போது பூக்கும் என்கிறார்?**

அறிவினால் ஆராய்ந்து, தூயவராம் திருவள்ளுவர் காட்டும் வழிதனிலே பொதுவுடைமைச் சமுதாயம் காண முயன்றால் அப்போது எங்கும் புதுமை பூக்கும்.

**கூடுதல் வினாக்கள்**

**1. முடியரசன் சிறுகுறிப்பு வரைக.**
- ❖ பாரதிதாசன் மூத்த தலைமுறைக் கவிஞர்களுள் ஒருவர்.
- ❖ மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சுப்பராயலு-சீதாலட்சுமி என்பாருக்கு மகனாகப்பிறந்தார்.
- ❖ துரைராசு என்ற தம் பெயரை முடியரசன் என மாற்றிக்கொண்டவர்.
- ❖ பாரதிதாசனோடு நெருங்கி பழகி அவருடைய முற்போக்கு எண்ணங்களை ஏற்றுப் பாடியவர்.
- ❖ தமது மறைவின் போதும் எச்சடங்குகளும் வேண்டா என்று உரைத்து அவ்வாறே நிறைவேறச் செய்தவர்.

**2. முடியரசன் இயற்றிய காப்பியங்கள் யாவை?**
- ❖ பூங்கொடி
- ❖ காவியப்பாவை
- ❖ வீரகாவியம்
- ❖

## இ) விடுதலை விளைத்த உரிமை

**கூடுதல் வினாக்கள்**

**1. கவிஞர் கண்ணதாசன் பற்றி சிறுகுறிப்பு வரைக.**
- ❖ சாத்தப்பன்-விசாலாட்சி தம்பதியருக்கு மகனாக சிறுகூடற்பட்டியிலே பிறந்த பாட்டுப்பறவை கண்ணதாசன்.
- ❖ கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா என்பதாகும்.

- ❖ பட்டி தொட்டிகளில் எல்லாம் தமது திரையிசைப்பாடல்களால் புகழ்பூத்த கவிஞர்.
- ❖ தமிழக அரசின் அரசவைக்கவிஞராக விளங்கியவர்.

**2. கண்ணதாசன் ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள் யாவை?**

- ❖ தென்றல்
- ❖ தென்றல்திரை
- ❖ சண்டமாருதம்
- ❖ முல்லை
- ❖ கண்ணதாசன்

## ஈ) தளை

**கூடுதல் வினாக்கள்**

**1. சிற்பி பாலசுப்பிரமணியம் சிறுகுறிப்பு வரைக.**

- ❖ கோவை மாவட்டம் ஆத்துப்பொள்ளாச்சி என்ற ஊரைச் சேர்ந்தவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
- ❖ கருத்தோவியங்களை வடிவமைக்கும் சொல்லேருழவர்
- ❖ சொல்லைத் தேர்ந்து தமிழ்பாடல் ஆக்கும் சிற்பி
- ❖ பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக பணியாற்றிவர்.

**2. சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் கவிதை நூல்களை குறிப்பிடுக.**

- ❖ சிரித்த முத்துகள்
- ❖ நிலவுப்பூ
- ❖ ஒளிப்பறவை
- ❖ சர்ப்பயாகம்
- ❖ சூரியநிழல்
- ❖ ஆதிரை

**3. சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் உரைநடை நூல்களை குறிப்பிடுக.**

- ❖ இலக்கியச்சிந்தனை
- ❖ மலையாளக்கவிதை
- ❖ அலையும் சுவடும்
- ❖ ஒரு கிராமத்து நதி

**4. சிற்பி பாலசுப்பிரமணியம் பெற்ற பரிசுகளை குறிப்பிடுக.**

- ❖ ஒரு கிராமத்து நதி என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி பரிசு
- ❖ தமிழக அரசின் பாவேந்தர் பரிசு
- ❖ தமிழ்பல்கலைக்கழகத்தின் ஆங்கில இலக்கிய நூற்பரிசு

## உ) கண்

**கூடுதல் வினாக்கள்**

**1. நா.காமராசன் குறிப்பு வரைக.**

- ❖ மதுரை மாவட்டம் போடி மீனாட்சிபுரம் கிராமத்தில் பிறந்தவர்.
- ❖ மறுமலர்ச்சி யுகத்தின் கவிஞனாகத் திகழ்பவர்.
- ❖ கிராமிய சந்தங்களுடன் புதுப்பாவை திகழப் படிம கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார்.
- ❖ அவர் சிந்தனை புதிது. தனித்துவம் வாய்ந்தது.

**2. நா.காமராசனின் படைப்புகளை குறிப்பிடுக.**

- ❖ சூரியகாந்தி
- ❖ சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்
- ❖ தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும்

**3. படிமம் - சிறுகுறிப்பு வரைக.**

- ❖ உருவகம் என்ற வழக்கு புதுக்கவிதைகளிலே படிமங்கள் என்று வழங்கப்படும்.
- ❖ கவித்துவ காட்சிகளை விவரிக்கும் சொல்லாட்சிகளே படிமங்கள்.

- ❖ படிமங்கள் புதிய புதிய அகக் காட்சிகளை தோற்றுவிக்கும்.
- ❖ புதுக்கவிதைகளுக்கு உயிர்ப்பும் வாழ்வும் வழங்குவன படிமங்கள் ஆகும்.

## ஊ) தண்ணீர் வங்கிகள்

**கூடுதல் வினா**

**1. ந. கருணாநிதி குறிப்பு வரைக.**
- ❖ கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் பிறந்தவர்.
- ❖ அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்.
- ❖ பூவிருந்தவல்லி அரசு மேனிலைப்பள்ளியில் முதகலை தமிழரசிரியராக பணியாற்றியவர்.
- ❖ இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதியுள்ளார்.

## 7. வழிபாட்டுப்பாடல்கள்

**1. தேவாரம் சிறுகுறிப்பு வரைக.**
- ❖ தே+வாரம்-தெய்வத்தைப்பற்றிய இன்னிசைப்பாடல்
- ❖ தே+ஆரம்-தெய்வத்திற்கு அணிவிக்கும் பூமாலை போன்ற பாமாலை
- ❖ முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என அழைக்கப்படும்.
- ❖ திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் என அழைக்கப்படும்.

**2. வேதம் அனைத்திற்கும் வித்து என்று அழைக்கப்படும் நூல் எது?**

திருப்பாவை

**3. புத்தமித்திரர் குறித்து குறிப்பு எழுதுக.**
- ❖ புத்தமித்திரர் புத்த மதத்தை சார்ந்தவர்
- ❖ இவரது காலம் கி.பி 11ம் நூற்றாண்டு
- ❖ வீரராசேந்திரசோழன் விருப்பத்திற்கு இணங்க ஐந்திலக்கணம் கூறும் வீரசோழியம் என்னும் நூலை இயற்றினார்.

**4. புத்தமித்திரர் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு எனும் எண் வரிசையில் எவ்வெவற்றைக் குறிக்கிறார்?**
- ❖ **ஒன்று** : புத்தமித்திரர் ஒன்று மனம் ஒருமைப்படுதலையும்,
- ❖ **இரண்டு** : நல்வினை, தீவினைகளாகிய இரு பிணைப்புகளையும்,
- ❖ **மூன்று** : காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று பகைகளையும்,
- ❖ **நான்கு** : அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு பொருள்களையும் குறிக்கின்றார்.

**5. துசங்கட்டுதல் விளக்கி எழுதுக.**
- ❖ துவசம் என்பது துசம் என்றானது. துவசம்-கொடி
- ❖ வெற்றிக்கொடி நாட்டுதல் என்று பொருள்
- ❖ எவர் ஒருவர் விடாப்பிடியாய் ஒரு செயலை முன்னின்று நடத்துகின்றாரோ அவரே வெற்றிக்கொடி நாட்டுவர்.

**கூடுதல் வினா:**

**1. பாவை-குறிப்பு வரைக.**
- ❖ பாவை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.
- ❖ பாவை என்ற சொல் ‘பொம்மை’ என்ற படிமத்தை குறித்தது.
- ❖ பாவை செய்யப்படும் நோன்புக்கு ஆகி, பின்னர் அந்நோன்பை தெரிவிக்கும் சிற்றிலக்கியத்தாகியது.

# பகுபத உறுப்பிலக்கணம்

**1. பகுதி + வினையெச்சவிகுதி**

1. மேவி - மேவு + இ
2. கூட்டி - கூட்டு+ இ
3. முடங்கி - முடங்கு+ இ
4. இரங்கி - இரங்கு+ இ
5. தோன்றி - தோன்று+ இ
6. விம்மி - விம்மு+ இ
7. எய்தி - எய்து+ இ

**2. பகுதி+வியங்கோள்வினைமுற்று விகுதி**

1. ஈக - ஈ + க
2. ஒழிக - ஒழி+ க
3. ஆகுக - ஆகு+ க
4. ஆடுக - ஆடு+ க

**3. பகுதி+தொழிற்பெயர்விகுதி**

பணிதல் - பணி+ தல்

**4. பகுதி+ எதிர்கால இடைநிலை+ தன்மை பன்மை வினைமுற்று விகுதி**

இறைஞ்சுவாம் - இறைஞ்சு+ வ் + ஆம்

**5. பகுதி+ இறந்தகால இடைநிலை+ பெயரெச்ச விகுதி**

ஈன்ற - ஈன் + ற் + அ

**6. பகுதி+ இறந்தகால இடைநிலை+ பெண்பால் வினைமுற்று விகுதி**

1. பாடினாள் - பாடு+ இன் + ஆள்
2. நீட்டினாள் - நீட்டு+ இன் + ஆள்

**7. பகுதி+ இறந்தகால இடைநிலை+ ஆண்பால் வினைமுற்று விகுதி**

1. முன்னினான் - முன் + இன் + ஆன்
2. நோக்கினான் - நோக்கு+ இன் + ஆன்

**8. பகுதி+ இறந்தகாலம்+ தன்மை பன்மை வினைமுற்று விகுதி**

குருகினோம் - குருகு+ இன் + ஓம்

**9. பகுதி+ எதிர்கால இடைநிலை+ பலர்பால் வினைமுற்று விகுதி**

1. தொழுவார் - தொழு+ வ் + ஆர்
2. பகர்வார் - பகர் + வ் + ஆர்
3. காண்பார் - காண் + ப் + ஆர்
4. செல்வார் - செல் + வ் + ஆர்

**10. பகுதி+ எதிர்கால இடைநிலை+ ஆண்பால் வினைமுற்று விகுதி**

1. வாழ்வான் - வாழ் + வ் + ஆன்
2. ஆற்றுவான் - ஆற்று+ வ் + ஆன்

**11. பகுதி+ எதிர்மறை இடைநிலை+ முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி**

திருந்தலீர் - திருந்து+ அல் + ஈர்

**12. பகுதி+ நிகழ்கால இடைநிலை+ தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி**

பருகுகின்றோம் - பருகு+ கின்று + ஓம்

**13. பகுதி+ இறந்த கால இடைநிலை+ தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி**

குருகினோம் - குருகு+ இன் + ஓம்

**14. பகுதி+ உடம்படுமெய் சந்தி + பெயரெச்ச விகுதி**

தொலைய - தொலை+ ய் + அ

**15. பகுதி+ சந்தி+ வியங்கோள் வினைமுற்று விகுதி**

காக்க - கா+ க் + க

**16. பகுதி+ சந்தி+ (ந் ஆனது விகாரம்) + இறந்தகால இடைநிலை+ வினையெச்ச விகுதி**

1. தவழ்ந்து - தவழ் + த்(ந்) + த் + உ
2. கடந்து - கட+ த்(ந்) + த் + உ
3. பொழிந்து - பொழி+ த்(ந்) + த் + உ
4. புலந்து - புல+ த்(ந்) + த் + உ

**17. பகுதி+ சந்தி+ (ன் ஆனது விகாரம்) + இறந்தகால இடைநிலை+ பெயரெச்ச விகுதி**

நின்ற - நில் (ன்) + ற் + அ

**18. பகுதி+ சந்தி+ இறந்தகால இடைநிலை+ பெயரெச்ச விகுதி**

அசைத்த - அசை+ த் + த் + அ

**19. பகுதி+ சாரியை+ எதிர்கால இடைநிலை+ தன்மை பன்மை வினைமுற்று விகுதி**

பணிகுவாம் - பணி + கு + வ+ ஆம்

**20. பகுதி+ எதிர்மறை இடைநிலை+ சாரியை+ ஆண்பால் வினைமுற்று விகுதி**

வாழாதான் - வாழ் + ஆ+ த் + ஆன்

**21. பகுதி+ சந்தி+ ந் ஆனது விகாரம் + இறந்தகால இடைநிலை+ சாரியை + ஆண்பால் வினைமுற்று விகுதி**

மறந்தனன் - மற + த்(ந்) + த் + அன் + அன்

தயாரிப்பு
திரு.செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி
மற்றும்
வெற்றிக்கு வழி ஆசிரியர் குழுவினர்